சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி
செயல் வீரர்கள் கூட்டம்

சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி செயல் வீரர்கள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேற்கு மாவட்ட செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே.சுபாசு, மு.கார்த்திகேயன், தொகுதி பார்வையாளர்கள் இ.ஜி. சுகவனம், டாக்டர் விவேக் உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாநகர, பகுதி, ஒன்றிய, கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், டிஜிட்டல் ஏஜன்ட்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திராவிடமாடல் நாயகர், கழகதலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், திருவாரூர் தொகுதிக்கு வேட்பாளராக பூண்டி.கே. கலைவாணன் அவர்களை அறிவித்ததையடுத்து, கமுககுடி ஊராட்சி புரசத்தாங்குடியில் வாக்குசேகரிப்பை தொடங்கி வீடு வீடாகச் சென்று சேகரித்தார். உடன் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் இருந்தனர்.

சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

(இரண்டாவது பட்டியல்)

தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்க்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சட்டமன்றத் தொகுதி	-	பார்வையாளர்
சீர்காழி, மயிலாடுதுறை	–	குத்தாலம் பி. கல்யாணம்
பொள்ளாச்சி, வால்பாறை	–	டாக்டர் மகேந்திரன்
பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு	–	தடங்கம் சுப்பிரமணி
தருமபுரி, பென்னாகரம்	–	டி.செங்குட்டுவன்
உதகமண்டலம், கூடலூர், குன்னூர்	–	எஸ். மோகன்
ஓசூர், தளி, கிருஷ்ணகிரி, பர்கூர்	–	பார் இளங்கோவன்
பெரம்பூர்	–	இரா. கிரிராஜன், எம்.பி.,
அம்பத்தூர்	–	வழக்கறிஞர் சலீம்
திரு.வி.க.நகர்	–	தமிழ் க.அமுதரசன்
திருவள்ளூர்	–	செஞ்சி சிவா
அந்தியூர்	–	ஏ.ஜி.வெங்கடாசலம்
ஈரோடு கிழக்கு	–	செந்தில்குமார்
ஈரோடு மேற்கு	–	திருச்செங்கோடு கந்தசாமி
மொடக்குறிச்சி	–	எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம்
குமாரபாளையம்	–	காந்திசெல்வன்
நன்னிலம்	–	குத்தாலம் க. அன்பழகன்
அரூர்	–	சத்தியமூர்த்தி
ஏற்காடு	–	எஸ்.ஆர். பார்த்திபன்
பரமக்குடி	–	வ.சத்தியமூர்த்தி
வாசுதேவநல்லூர்	–	செண்பகவிநாயகம்
சங்கரன்கோவில்	–	தங்கவேலு
சிவகாசி	–	தனுஷ் எம். குமார்
மதுரை மத்திய	–	சேலம் தரணிதரன்

குறிப்பு : ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 31.03.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.

ஈரோடு கோபிசெட்டிப்பாளையம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் என்.நல்லசிவம் நகர மார்க்கெட் பகுதியில் பொதுமக்களிடம், உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் கோபி நகர மன்ற தலைவர் என். ஆர்.நாகராஜ், வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.திருவேங்கடம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தேனி வி.ஆர்.ராஜன் மாமியார் மறைவு!

தேனி, ஏப்.2-

தமிழ்நாடு தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பு மாநில பொதுச்செயலாளரும், தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. அயலக அணி அமைப்பாளரும், வினோரா பவுண்டேஷன் நிறுவனருமான வி.ஆர்.ராஜனின் மாமியாரும், தேனி லட்சுமிபுரம் அரசு மேல் நிலைப்பள்ளி ஆசிரியை ரேணுகா அவர்களின் தாயாருமான பார்வதி அவர்கள் நேற்று முன்தினம் (31.3. 2026) இயற்கை எய்தினார். என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவிற்கு பல்வேறு தரப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய செயலாளர்கள், நகர, செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், கழக முன்னோடிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.

தி. மு. க. தொழிலாளர் அணி

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொழிலாளர் அணியின் திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

திருப்பூர் தெற்கு மாவட்டம்

தலைவர் - சுந்தரராஜ் (எ) வெங்கிடுபதி ஜே.வி.எல். நகர், பூலாங்கிணறு அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642122, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் – கே. நாகராஜ் 66, சிவசக்தி குடியிருப்பு, தாராபுரம் சாலை, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - பி.சி. புஷ்பராஜ் 3/159, சுங்காரமடக்கு, வடுகபாளையம், உடுமலைப்பேட்டை - 642205, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) மு. அய்யாவு 5/495, முருகன் நகர், கணக்கம்பாளையம் அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 2) ச. விஜயகுமார் 143, கழுகரை வீதி, யூனியன் ஆபீஸ் அருகில், மடத்துக்குளம் - 642113, திருப்பூர் மாவட்டம். 3) மு. சிவக்குமார் 726, மலையாண்டிபட்டணம், துங்காவி அஞ்சல், மடத்துக்குளம் - 648203, திருப்பூர் மாவட்டம். 4) அ. ராஜேந்திரன், 26, காந்தி நகர், பாலக்காடு ரோடு, ஜமீன் ஊத்துக்குளி, பொள்ளாச்சி - 642004, திருப்பூர் மாவட்டம். 5) ஆ. செந்தில்குமார் 334, பஞ்சாயத்து ரோடு, அரியநாச்சிபாளையம், மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம். 6) த. காளிதாசன் 3/245சி, நால் ரோடு, குடிமங்கலம், உடுமலைப்பேட்டை - 642201, திருப்பூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 31-03-2026.

பிடிசி ஜி.செல்வராஜ்
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி

தி. மு. க. தொழிலாளர் அணி

இராமநாதபுரம் மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

இராமநாதபுரம் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்களாக **எஸ். பாலகிருஷ்ணன்,** (சேதுபதி நகர், நாகாச்சி உச்சிப்புளி அஞ்சல், இராமநாதபுரம் மாவட்டம்), **கா. சத்தியேந்திரன்** (எல்.கருங்குளம், எட்டிவயல் அஞ்சல், இராமநாதபுரம் மாவட்டம்) ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 31-03-2026.

பிடிசி ஜி.செல்வராஜ்
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து

ஈரோட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று பரப்புரை!

தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈரோடு, ஏப்.2-

2026 சட்டமன்றத் தேர்தலையொட்டி முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதி அவர்கள் இன்று (2.4.2026-வியாழக்கிழமை) காலை 9 மணி அளவில் ஈரோடு பெருந்துறை ரோடு, திண்டல் பஞ்சாபி அருகில் தனியார் இடத்தில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஒருங்கிணைந்த ஈரோடு மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளின் வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்து வாக்குகள் சேகரிக்க பரப்புரை மேற்கொள்ள உள்ளார்.

எனவே ஒருங்கிணைந்த மாவட்டத்திற்குட்பட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், தோழமை அமைப்புகள், தி.மு.கழக மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், வெல்லும் தமிழ் பெண்கள் பொறுப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA 2, BLC, BDA கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்,

கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர் ஏப்.2.

தஞ்சை வடக்கு மாவட்டம் (கும்பகோணம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம் கும்பகோணத்தில் இன்று (02.04.2026-வியாழன்) நடைபெற உள்ளதாக மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கையை வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையை வருமாறு:

இன்று (02.04.2026-வியாழன்) காலை 9.00 மணியளவில் கும்பகோணம், அரசூர் பைபாஸ் ரோட்டில் உள்ள டி.எஸ்.மஹாலில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கும்பகோணம் சட்டமன்ற தொகுதி தோழமைக் கட்சி செயல் வீரர்கள் ஆலோசனை கூட்டம்

கழக சட்டத்திட்ட திருத்தக் குழு தலைவர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி தலைமையிலும், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், முன்னாள் எம்பி செ.இராமலிங்கம் மற்றும் தோழமைக் கட்சிகளின் மாவட்ட தலைவர் மற்றும் நிர்வாகிகள் முன்னிலையில் இக்கூட்டம் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் கும்பகோணம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள், தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் இந்நாள் நிர்வாகிகள், அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளரும், கும்பகோணம் சட்டமன்ற தொகுதி வேட்பாளருமான சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஜி.எம். ஷா

ஏப்ரல் 2 (2014)



கன்னியாகுமரி மாவட்டக் கழகச் செயலாளராக 1959ல் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். 1993ஆம் ஆண்டு மாவட்ட பொறுப்புக்குழு தலைவர், 1999ஆம் ஆண்டு மாவட்டப் பொறுப்பாளர் ஆகிய பொறுப்புகளை ஏற்று திறம்பட பணியாற்றியவர்.

மேலும் கழக பொதுக்குழு, செயற்குழு, சொத்து பாதுகாப்புக்குழு, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

1965 முதல் 1990 வரை மற்றும் 1996ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை தொடர்ந்து தொடர்ந்து 30 ஆண்டுகள் வடக்கு சூரங்குடி ஊராட்சி தலைவராக மூன்று முறை போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டு மக்கள் நலப் பணியாற்றியவர்.

1976ஆம் ஆண்டு அவசரநிலைக் காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்துள்ளார். மேலும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.